1987 நவம்பர் 10]

சீவலப்பேரி தண்ணீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சியிடம் ஒப்படைத்தல்.

7—(* வினா எண். 9303) திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீவலப்பேரி தண்ணீர்த் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சியிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சீவலப்பேரி தண்ணீர் திட்டம் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர் திட்டமாக இருப்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியவர்கள் அடங்கிய உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டத்தை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் கூடி முடிவு எடுத்த பின்பே இறுதியான முடிவு செய்து சீவலப்பேரி குடிநீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சியிடம் ஒப்படைக்க முடியும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீவலப்பேரியில், பைப்லைன் போகும் ரோடு ஓரங்களிலுள்ள கோபாலபுரம், மணியாச்சி, குப்பம்பட்டி, ராயல்காலனி ஆகிய இடங்களிலிருந்து குழாய் இணைப்பு கேட்டு மனுக்கள் வந்துள்ளனவா ? அந்த ஊர்களுக்கு குழாய் இணைப்பு கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலிருந்து மனுக்கள் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வந்த வண்ணம் உள்ளன. தனிச் கேள்வி போட்டால் அதற்கான விடை தரப்படும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீவலப்பேரி தண்ணீர் எட்டையாபுரம், கழுகுமலை ஆகிய ஊர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே,

[1987 நவம்பர் 10

கோவில்பட்டி தொகுதியிலிருக்கும் பாக்கி கிராமங்களுக்கும் தனி பம்பு போட்டு தண்ணீர் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திலே எல்லா அதிகாரி களையும் கலந்து செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, சீவலப் பேரியிலே குடிநீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சி எடுத்துக் கொண்ட பிறகு மற்ற வேலைகள் தொடர்ந்து நடைபெறும்.

குறிச்சி பேரூராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

8—(*வினா எண். 11990) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி மற்றும் அதனை சார்ந்த பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி பகுதிகளுக்கு, 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சிறுவாணி திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அதனை சார்ந்த புதிதாக ஏற்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க பேரூராட்சியிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதும் பரிசீலிக்கப் படும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, குறிச்சி பேரூராட்சி மன்றத்திற்கு 1982 ஆம் ஆண்டு சிறு வாணி திட்டத்தின்மூலம் திட்டமிடப்பட்டு தண்ணீர் வழங்குவ தாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், ஏற் கெனவே அந்தப் பகுதியில் நீண்ட காலமாக விரிவுபடுத்தப் படாத, ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருந்த ஆற்றுப்பாலம், சீனிவாசபுரம், அண்ணா நகர், அண்ணாபுரம், கார்மல் நகர் ஆகிய சீனிவாசபுரம், அண்ணா நகர், அண்ணாபுரம், காமல் நகர் ஆகிய பகுதிகளுக்கும் குறிச்சி அவுசிங் யூனிட்டிலே இருக்கக்கூடிய ஃபேஸ்-1, ஃபேஸ்-2 ஆகிய பகுதிகளில் பேரூராட்சி மன்றம் பணம் செலுத்தியும் அதற்குத் தேவையான ஆட்களை நியமிக்காமல்,